# மாநகரில் ரூ5.60 கோடி மதிப்பில் முடிவுற்ற வளர்ச்சிப் பணிகள்

## கணபதி ப.ராஜ்குமார் எம்.பி. திறந்துவைத்தார்

**கோவை, பிப்.24:** கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத்தில் ரூ5.60 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற வளர்ச்சிப் பணிகளை கோவை மக்களவை உறுப்பினர் கணபதி ப.ராஜ்குமார் செவ்வாய்க்கிழமை திறந்து வைத்தார்.

கோவை மாநகராட்சி, வடக்கு மண்டலம் 26-ஆவது வார்டுக்கு உள்பட்ட விளாங்குறிச்சி சாலை பீளமேடு பகுதியில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்க நிதியின் கீழ் ரூ.2.09 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நகர்ப்புற வீடற்ற ஆதரவற்றோர் தங்கும் விடுதி, கிழக்கு மண்டலம், 53-ஆவது வார்டுக்கு உள்பட்ட மசக்காளிபாளையம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் மாநகராட்சி பொதுநிதியின் கீழ் ரூ.86 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஸ்மார்ட் வகுப்பறைகள், அதே பள்ளியில் மாநகராட்சி கல்வி நிதியின் கீழ் ரூ.66.40 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பேவர் பிளாக் மற்றும் கூடுதல் வகுப்பறைகள், 24-ஆவது வார்டுக்கு உள்பட்ட கொடிசியா சாலையில் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள வணிகவளாகமையம், 22-ஆவது வார்டுக்கு உள்பட்ட சேரன் மாநகர் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில்

ரூ.62 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை, 6-ஆவது வார்டுக்கு உள்பட்ட நேரு நகர் மாநகராட்சிப் பள்ளியில் ரூ.87 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள், 23-ஆவது வார்டு, மதுசூதனன் நகரில் ரூ.20.20 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள பொறியாளர், சுகாதார மேற்பார்வையாளர் மற்றும் வரி வசூல் மையம் என மொத்தம் ரூ.5.60 கோடி மதிப்பீட்டில் 7 வளர்ச்சித் திட்டப் பணிகளை மக்களவை உறுப்பினர் கணபதி ப.ராஜ்குமார் செவ்வாய்க்கிழமை திறந்துவைத்தார்.

முன்னதாக, கிழக்கு, வடக்கு மற்றும் மேற்கு மண்டலங்களுக்கு உள்பட்ட வார்டு பகுதிகளில், ரூ.4.95 கோடி மதிப்பீட்டில் சாலை சீரமைக்கும் பணிகளை தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்வுகளில், மேயர் கா.ரங்கநாயகி, துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், மாநகர தலைமைப் பொறியாளர் விஜயகுமார், மாநகர நல அலுவலர் மோகன், மண்டலத் தலைவர்கள் இலக்குமி இளஞ்செல்வி, வே.கதிர்வேல், உதவி ஆணையர் மகேஷ் கனகராஜ், உதவி செயற்பொறியாளர்கள் சத்தியமூர்த்தி, கல்யாணசுந்தரம், 26-ஆவது வார்டு உறுப்பினர் சித்ரா வெள்ளிங்கிரி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

பீளமேட்டில் நகர்ப்புற வீடற்ற ஆதரவற்றோர் தங்கும் விடுதியை திறந்துவைத்த கணபதி ப.ராஜ்குமார் எம்.பி. உடன், மேயர் கா.ரங்கநாயகி, ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன், 26-ஆவது வார்டு உறுப்பினர் சித்ரா வெள்ளிங்கிரி உள்ளிட்டோர்.

# ஜெயலலிதா பிறந்த நாள் விழா: அதிமுகவினர் கொண்டாட்டம்

ஜெயலலிதா பிறந்த நாளையொட்டி கோவை அவிநாசி சாலையில் உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் எம்எல்ஏ-க்கள் அம்மன் கே.அர்ச்சுணன், கே.ஆர்.ஜெயராம் உள்ளிட்ட அதிமுகவினர்.

**கோவை, பிப். 24:** முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்த நாள் விழாவை கோவை மாநகர் மாவட்ட அதிமுகவினர் கேக் வெட்டி கொண்டாடினர்.

ஜெயலலிதா பிறந்த நாள் விழாவையொட்டி மாநகர் மாவட்ட அதிமுக சார்பில் கட்சி அலுவலகமான இதயதெய்வம் மாளிகையில் இருந்து மாவட்டச் செயலரும் வடக்கு தொகுதி எம்எல்ஏவுமான அம்மன் கே.அர்ச்சுணன் தலைமையில் அதிமுகவினர் ஊர்வலம் நடத்தினர். ஜெயலலிதா உருவப்படம் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் அவிநாசி சாலையில் உள்ள ஜெயலலிதாவின் உருவச் சிலை பகுதிக்குச் சென்ற அவர்கள், சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இதைத் தொடர்ந்து கட்சி அலுவலகத்தில் கட்சிக் கொடியேற்றி, கேக் வெட்டியும் இனிப்புகள் வழங்கியும் ஜெயலலிதா பிறந்த நாளை கொண்டாடினர். இந்த நிகழ்ச்சியில், அம்மா பேரவை இணைச் செயலரும், சிங்காநல்லூர் எம்எல்ஏவுமான கே.ஆர்.ஜெயராம், முன்னாள் அமைச்சர் செ.ம.வேலுசாமி, மாநில எம்ஜிஆர் இளைஞரணி இணைச் செயலர் வடவள்ளி சந்திரசேகர், மாநகராட்சி அதிமுக மாமன்ற குழுத் தலைவர் பிரபாகரன், கட்சியின் மாணவரணி செயலர் சிங்கை ஜி.ராமச்சந்திரன், மாவட்ட துணைச் செயலர் பீளமேடு துரைசாமி, மாவட்டப் பொருளாளர் பார்த்திபன் உள்ளிட்ட நிர்வாகிகள், தொண்டர்கள் பலர் பங்கேற்றனர்.

### கவுண்டம்பாளையத்தில்...

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்த நாளையொட்டி, கவுண்டம்பாளையத்தில் உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார் பி.ஆர்.ஜி.அருண்குமார் எம்.எல்.ஏ. உடன், வீரபாண்டி பேரூராட்சி முன்னாள் தலைவர் கே.வி.என்.ஜெயராமன் மற்றும் கட்சி நிர்வாகிகள்.

### வால்பாறையில்...

வால்பாறையில் ஜெயலலிதாவின் பிறந்த நாளையொட்டி அதிமுக தொழிற்சங்க அலுவலகம் முன் வைக்கப்பட்டிருந்த அவரது உருவப்படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்துகிறார் அதிமுக தொழிற்சங்கத் தலைவர் வால்பாறை அமீது. உடன், மேற்கு நகர பொறுப்பாளர் சலாவுதீன் அமீது, நரசப்பன், சுடர்பாலு உள்ளிட்டோர்.

# விபத்தில் தாயைப் பிரிந்த பெண் குழந்தையை மீட்டு பெற்றோரிடம் ஒப்படைத்த 'பிங்க்' ரோந்து போலீஸார்

**கோவை, பிப். 24:** கோவையில் சாலை விபத்தில் தாயைப் பிரிந்த இரண்டரை வயதுப் பெண் குழந்தையை 'பிங்க்' ரோந்து பிரிவு போலீஸார் மீட்டு பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

கோவை போத்தனூர் பகுதியைச் சேர்ந்த தம்பதிக்கு இரண்டரை வயதில் பெண் குழந்தை உள்ளது. கணவருடன் ஏற்பட்ட தகராறில் அவரது மனைவி தனது குழந்தையை இருசக்கர வாகனத்தில் ஏற்றிக் கொண்டு திங்கள்கிழமை இரவு கணபதி பகுதியில் உள்ள தனது தோழி வீட்டுக்குச் சென்றுள்ளார்.

பின்னர், அதிகாலை 2 மணிக்கு அந்தப் பெண் மீண்டும் குழந்தையுடன் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, அண்ணா சிலை சிக்னல் அருகே இருசக்கர வாகனத்திலிருந்து தவறி கீழே விழுந்தார். இதில் மயங்கிய அந்தப் பெண்ணை அந்தப் பகுதியில் வந்தவர்கள் மீட்டு கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மீட்டவர்களில் ஒரு பெண், அந்தக் குழந்தையை தூக்கி வைத்திருந்தார்.

குழந்தையின் தாய் எந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்பதை அறியாமல் அந்தப் பெண், குழந்தை தன்னிடம் இருப்பது குறித்து காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்தார். பின்னர், கோவை 'பிங்க்' ரோந்து போலீஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, தாமஸ் பார்க் ரவுண்டானா பகுதியில் நின்றிருந்த அந்தப் பெண்ணிடமிருந்து போலீஸார் லேசான காயத்துடன் இருந்த அந்தக் குழந்தையை மீட்டு கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

இதற்கிடையில், மயக்கம் தெளிந்த அந்தப் பெண் தனது குழந்தையைக் காணவில்லை என போத்தனூர் காவல் நிலையத்தில் அதிகாலை 4 மணிக்கு புகார் அளித்தார். உடனடியாக அனைத்து காவல் நிலையங்களுக்கும் தகவல் பகிரப்பட்டது. அப்போது, 'பிங்க்' ரோந்து போலீஸாரிடம் குழந்தை பாதுகாப்பாக இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து, பிங்க் ரோந்து பிரிவு பொறுப்பு அலுவலர் சிவகாமி செல்வி, ஓட்டுநர் சங்கர் ஆகியோர் அந்தக் குழந்தையை அதன் பெற்றோரிடம் பத்திரமாக ஒப்படைத்தனர். உரிய நேரத்தில் செயல்பட்டு குழந்தையை மீட்ட கோவை மாநகர பிங்கே ரோந்து போலீஸாரின் செயலை பொதுமக்கள் பாராட்டினர்.

# இளைஞர் அடித்துக் கொலை: 5 பேர் கைது

**பெ.நா.பாளையம், பிப்.24:** பெரியநாயக்கன்பாளையத்தை அடுத்த சின்னமத்தம்பாளையத்தில் நண்பர்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறில் இளைஞரை அடித்துக் கொலை செய்த 5 பேரை போலீஸார் கைது செய்து சிறையிலடைத்தனர்.

கோவை மாவட்டம், பெரியநாயக்கன்பாளையத்தை அடுத்த பெட்டதாபுரம், விநாயகர் கோயில் வீதியைச் சேர்ந்தவர் பாலகிருஷ்ணன் (எ) அந்தோணி (36). இவருக்கு மனைவி சரண்யா தேவி, குழந்தைகள் உள்ளனர். இவர் கூலி வேலைக்கு சென்று வந்தார்.

இந்நிலையில், இவரது உறவினரான மத்தம்பாளையத்தைச் சேர்ந்த ஜீவா என்பவர் மது அருந்துவதற்காக அந்தோணியை பிப்ரவரி 15-ஆம் தேதி அழைத்துச் சென்றுள்ளார். நீண்ட நேரமாகியும் வீடு திரும்பாததால் மனைவி சரண்யா தனது உறவினரான கார்த்திக்கை அழைத்து அந்தோணியை பார்த்து வரச் சொல்லியுள்ளார். அவர் சிவகுமார் என்பவரிடம் விசாரித்தபோது, சின்னமத்தம்பாளையத்தில் உள்ள அண்ணா நகர், சின்னகவுண்டர் தோட்டம் அருகே வரச் சொல்லியுள்ளார். இதையடுத்து, கார்த்திக் அங்கு சென்று பார்த்தபோது, அந்தோணி மயங்கிய நிலையில் கிடந்துள்ளார்.

இதைத் தொடர்ந்து, சிவகுமாரிடம் விசாரித்தபோது, இருசக்கர வாகனத்தில் வரும்போது அந்தோணி கீழே விழுந்துவிட்டார் எனக் கூறியுள்ளார். இதையடுத்து, காரமடையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அந்தோணி அனுமதிக்கப்பட்டார். பின்னர் வீட்டுக்கு அழைத்து வரப்பட்ட நிலையில், வெள்ளிக்கிழமை அவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டதால் மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அப்போது, ஜீவா, சிவகுமார், விஜயராஜ், சேகர், சூர்யா ஆகியோர் தன்னை தாக்கியதாக கூறியுள்ளார். தொடர்ந்து அந்தோணியின் உடல்நிலை மோசமடைந்ததையடுத்து, மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார்.

இது குறித்து சரண்யா அளித்த புகாரின்பேரில், பெரியநாயக்கன்பாளையம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து மேட்டுப்பாளையத்தைச் சேர்ந்த சேகர் (34), சிறுமுகையைச் சேர்ந்த சிவகுமார் (34), ஈரோடு மாவட்டம், புன்செய் புளியம்பட்டியைச் சேர்ந்த விஜயராஜ் (22), சின்னமத்தம்பாளையத்தைச் சேர்ந்த ஜீவா (27), சூர்யா (25) ஆகியோரை கைது செய்து விசாரணை நடத்தியதில் அவர்கள் கொலை செய்ததை ஒப்புக் கொண்டனர். இதையடுத்து, போலீஸார் 5 பேரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி கோவை மத்திய சிறையில் அடைத்தனர்.

# இருகூரில் 30 ஆண்டுகளுக்குப் பிறகு ஒதுக்கப்பட்ட வீட்டுமனைகளில் குடியேறிய மக்கள்

**கோவை, பிப். 24:** கோவை மாவட்டம், இருகூரில் 30 ஆண்டுகளுக்குப் பிறகு, அரசு ஒதுக்கிய வீட்டுமனைகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் செவ்வாய்க்கிழமை குடிசை அமைத்து குடியேறினர்.

கோவை மாவட்டம், இருகூர் பேரூராட்சியில் நிலமற்ற மக்களுக்காக 7 ஏக்கர் 29 சென்ட் நிலத்தை கையகப்படுத்த 1994-இல் தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டது. இதற்காக 1996-இல் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு, 292 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குடும்பங்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டன.

பட்டா வழங்கப்பட்ட நிலையில், சில தனி நபர்கள் போலி ஆவணங்கள் மூலம் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து மக்கள் குடியேறுவதைத் தடுத்து வந்ததாகக் கூறப்படுகிறது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் இந்த நிலத்தைப் பெற்றுத்தர மக்களுடன் இணைந்து தொடர் போராட்டங்களையும், சட்டப் போராட்டங்களையும் நடத்தி வந்தனர். இந்நிலையில், இந்த வழக்கில் கடந்த 2025 செப்டம்பர் மாதம் தீர்ப்பளித்த நீதிமன்றம், அரசின் நில எடுப்பு செல்லுபடியாகும் எனத் தெரிவித்தது.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை ஒன்று திரண்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பயனாளிகள், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வீட்டுமனைகளில் 30 ஆண்டுகளுக்குப் பிறகு குடிசை அமைத்து குடியேறினர்.

செண்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911
மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

**மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு**
**(E-Auction Notice)**
**( SARFAESI சட்டம் 2002-ன் கீழ்)**

SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற செண்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் சுவாதீனம் எடுத்திருந்தார். இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

**கிளை : பீளமேடு கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் பெற்றவர் : M/s.மகாலட்சுமி சர்வீஸ் அப்பார்ட்மென்ட் (பங்குதாரர்கள் : திரு.R.ரமேஷ் மற்றும் திருமதி.T.ஷீலா),** T.S.No.6, பிரபாதம் அப்பார்ட்மெண்ட், கோயம்புத்தூர் பப்ளிக் பள்ளி அருகில், சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி, கோயம்புத்தூர் - 641035. **உத்தரவாதம் அளித்தவர் : திரு.R.ரமேஷ் மற்றும் திருமதி.T.ஷீலா, க/பெ.திரு.R.ரமேஷ்,** 53A, டீச்சர்ஸ் காலனி, KNG புதூர், G N மில்ஸ், கோயம்புத்தூர் - 641029. **கடன் நிலுவைத் தொகை : 23.02.2026 வரையில் ரூ.4,63,18,320.45 மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேட்பு அறிவிப்பு தேதி : 03.10.2025. அடையாள சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி : 06.12.2025. சொத்து விபரம் : 1)** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், காந்திபுரம் சார்பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு தாலுக்கா, சின்னவேடம்பட்டி கிராமம், S.F.No.394/1B-ல் 57 செண்ட் 421 சதுர அடியும், S.F.No.393/2-ல் 3 செண்ட் 118 சதுர அடியும், ஆக மொத்தம் 61 செண்ட் 103 சதுர அடி (அல்லது) 26675 சதுர அடி கொண்ட நிலத்தில், பிரபாதம் என்ற பெயரில் பட்டியல் A சொத்தில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பில், மூன்றாம் தளத்தில், Type B பிரிவில், பிளாட் எண். P-TF 2 என்ற கதவு எண் கொண்ட ஒரு படுக்கையறை அப்பார்ட்மெண்ட். இதன் கட்டிட அனுமதி எண்கள் BL No.410/2012/MH3 (N) மற்றும் B.A.No.484/ 2012 MH3(N) நாள் 09.07.12 ஆகும். இதன் மொத்த கட்டுமானப்பகுதி பரப்பளவு 884 சதுர அடி (இதில் தளங்கள், மேற்கூரை, அப்பார்ட்மெண்டுகளுக்கு இடையிலான சுவர்கள் மற்றும் பொதுவான இடங்களுக்கான பங்கீடு சகிதம்) மற்றும் இதனுடன் ஒதுக்கப்பட்ட கவர்டு கார் பார்க்கிங் வசதியும் அடங்கும். **2)** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், காந்திபுரம் சார்பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு தாலுக்கா, சின்னவேடம்பட்டி கிராமம், S.F.No.394/1B-ல் 57 செண்ட் 421 சதுர அடியும், S.F.No.393/2-ல் 3 செண்ட் 118 சதுர அடியும், ஆக மொத்தம் 61 செண்ட் 103 சதுர அடி (அல்லது) 26675 சதுர அடி கொண்ட நிலத்தில், பிரபாதம் என்ற பெயரில் பட்டியல் A சொத்தில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பில், மூன்றாம் தளத்தில், Type C பிரிவில், பிளாட் எண். P-TF 3 என்ற கதவு எண் கொண்ட இரண்டு படுக்கையறை அப்பார்ட்மெண்ட். இதன் கட்டிட அனுமதி எண்கள் BL No.410/2012/MH3 (N) மற்றும் B.A.No.484/ 2012 MH3(N) நாள் 09.07.12 ஆகும். இதன் மொத்த கட்டுமானப்பகுதி பரப்பளவு 1177 சதுர அடி (இதில் தளங்கள், மேற்கூரை, அப்பார்ட்மெண்டுகளுக்கு இடையிலான சுவர்கள் மற்றும் பொதுவான இடங்களுக்கான பங்கீடு சகிதம்) மற்றும் இதனுடன் ஒதுக்கப்பட்ட கவர்டு கார் பார்க்கிங் வசதியும் அடங்கும். **3)** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், காந்திபுரம் சார்பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு தாலுக்கா, சின்னவேடம்பட்டி கிராமம், S.F.No.394/1B-ல் 57 செண்ட் 421 சதுர அடியும், S.F.No.393/2-ல் 3 செண்ட் 118 சதுர அடியும், ஆக மொத்தம் 61 செண்ட் 103 சதுர அடி (அல்லது) 26675 சதுர அடி கொண்ட நிலத்தில், பிரபாதம் என்ற பெயரில் பட்டியல் A சொத்தில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பில், மூன்றாம் தளத்தில், Type C பிரிவில், பிளாட் எண். P-TF 4 என்ற கதவு எண் கொண்ட இரண்டு படுக்கையறை அப்பார்ட்மெண்ட். இதன் கட்டிட அனுமதி எண்கள் BL No.410/2012/MH3 (N) மற்றும் B.A.No.484/ 2012 MH3(N) நாள் 09.07.12 ஆகும். இதன் மொத்த கட்டுமானப்பகுதி பரப்பளவு 1177 சதுர அடி (இதில் தளங்கள், மேற்கூரை, அப்பார்ட்மெண்டுகளுக்கு இடையிலான சுவர்கள் மற்றும் பொதுவான இடங்களுக்கான பங்கீடு சகிதம்) மற்றும் இதனுடன் ஒதுக்கப்பட்ட கவர்டு கார் பார்க்கிங் வசதியும் அடங்கும். **4)** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், காந்திபுரம் சார்பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு தாலுக்கா, சின்னவேடம்பட்டி கிராமம், S.F.No.394/1B-ல் 57 செண்ட் 421 சதுர அடியும், S.F.No.393/2-ல் 3 செண்ட் 118 சதுர அடியும், ஆக மொத்தம் 61 செண்ட் 103 சதுர அடி (அல்லது) 26675 சதுர அடி கொண்ட நிலத்தில், பிரபாதம் என்ற பெயரில் பட்டியல் A சொத்தில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பில், மூன்றாம் தளத்தில், Type C பிரிவில், பிளாட் எண். P-TF 5 என்ற கதவு எண் கொண்ட இரண்டு படுக்கையறை அப்பார்ட்மெண்ட். இதன் கட்டிட அனுமதி எண்கள் BL No.410/2012/MH3 (N) மற்றும் B.A.No.484/ 2012 MH3(N) நாள் 09.07.12 ஆகும். இதன் மொத்த கட்டுமானப்பகுதி பரப்பளவு 1177 சதுர அடி (இதில் தளங்கள், மேற்கூரை, அப்பார்ட்மெண்டுகளுக்கு இடையிலான சுவர்கள் மற்றும் பொதுவான இடங்களுக்கான பங்கீடு சகிதம்) மற்றும் இதனுடன் ஒதுக்கப்பட்ட கவர்டு கார் பார்க்கிங் வசதியும் அடங்கும். சொத்து பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளது : வடக்கில் S.F.No.395-ல் உள்ள நிலங்கள், கிழக்கில் S.F.No.394/2-ல் உள்ள நிலங்கள், மேற்கில் S.F.No.394/ 1A-ல் உள்ள நிலங்கள், தெற்கில் 30 அடி மாநகராட்சி சாலை. **காப்பு விலை : ரூ.3,11,20,000/-. முன்வைப்புத் தொகை : ரூ.31,12,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-. ஏலம் நடைபெறும் தேதி : 27.03.2026. ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை 10 நிமிட கால நீட்டிப்புடன் .** சொத்தினை பார்வையிடும் தேதி : **அனைத்து வேலை நாட்களிலும் 19.03.2026 முதல் 25.03.2026 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி : 26.03.2026 மாலை 4.00 மணி வரை. சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, பீளமேடு கிளை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : Mob No : 8489903059 / முதன்மை மேலாளர் : Mob No : 8489903057**

**நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் : 1.** ஏல விற்பனை ஆன்லைன் மின்னணு ஏலம் / ஏலம் கோருதல் என்ற முறையில் **https://baanknet.com** என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் (ஏலம் முடிவுக்கு வரும் வரையில் 5 நிமிடம் கால நீட்டிப்புடன்) நடைபெறும். **2.** ஏல விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் **26.03.2026,** மாலை **4.00** மணி அளவிலோ அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிக்க வேண்டும். **3.**மின்னணு ஏல விற்பனையானது **"அடையாள சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ள நிலையில்"** என்ற அடிப்படையில் நடைபெறும். **4.** விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முன்பாக **https://baanknet.com** என்ற இணையதளத்திற்கு சென்று முழு விபரங்களுடன் கூடிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **5.** வெற்றிபெற்ற ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961-ன் உட்பிரிவு 194 IAன் பிரகாரம் ரூ.50.00 லட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்பினை உடைய அசையாச் சொத்துக்களின் விற்பனை நடைமுறைகளில் 1% TDS தொகையினை செலுத்த வேண்டும். இத்தொகையினை படிவம் 26QB ல் சலான் (Challan) பூர்த்தி செய்து செலுத்தியதன் பின்னர் அதற்கான TDS சான்றிதழின் அசல் இரசீதினை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். **6.** மேலும் சொத்து தொடர்பான விபரங்களை அறிய **செண்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, பீளமேடு கிளை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : Mob No : 8489903059 / முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903057, செண்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மண்டல அலுவலகம், கோயம்புத்தூர், மின்னஞ்சல் முகவரி :recvcoimro@centralbank.co.in,** அவர்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். ஏலதாரர் மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்து கொண்ட பின்னர், விருப்பமுள்ள ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர் பின்வரும் ஆவணங்களை ஏல விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் கடைசி தேதிக்கு முன்பாக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். 1) NEFT/RTGS சலான் ஆகியவற்றின் நகல், 2) PAN கார்டு நகல், 3) அடையாளச் சான்று (KYC) சுய சான்றளிக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட், 4) முகவரிச் சான்று, மேற்கண்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்யாவிடில் ஏல விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும்.

**தேதி : 23.02.2026**
**இடம் : பீளமேடு**

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
**செண்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா**

इंडियन बैंक இந்தியன் வங்கி
इलाहाबाद அலகாபாத்

**SAMV கோயம்புத்தூர் :**
முதல் தளம், கார்மல் கார்டன் பள்ளி அருகில், புலியகுளம் மெயின் ரோடு,
கோயம்புத்தூர் - 641 045 மொபைல் : 94426 46501,
மின்னஞ்சல் : armbcoimbatore@indianbank.co.in

**வேண்டுமென்றே தவணை தவறியவர்கள் குறித்த பொது அறிவிப்பு**

இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுவது என்னவென்றால், கீழ் குறிப்பிட்ட கடன்தாரர்/உரிமையாளர்/உத்தரவாதமளித்தவர்/அடமானதாரர் **(M/s. ஸ்ரீ லட்சுமி பேப்பர் புராடக்ட்ஸ் – வாராக் கடன் கணக்கு (NPA) ), இந்தியன் வங்கி SAM Small கோயம்புத்தூர் கிளையில்** பெற்றுள்ள கடன் கணக்கிற்கு தொகையை திருப்பிச் செலுத்தாமல், வேண்டுமென்றே புறக்கணித்துள்ளார். எனவே வங்கியின் விதிகள்/இந்திய ரிசர்வ் வங்கியின் நடைமுறையில் உள்ள விதிகள் மற்றும் நெறிமுறைகளின்படி **'வேண்டுமென்றே தவணை தவறியவர்களாக'** அறிவிக்கப்படுகிறார்கள்.
**வேண்டுமென்றே தவணை தவறியவர்கள் குறித்த விபரம் :**

**திருமதி. K.ரெங்கலட்சுமி**
**க/பெ. A.காளிமுத்து**
**(உரிமையாளர்/அடமானதாரர்)**



**திரு. A.காளிமுத்து**
**த/பெ. அருணாச்சலம்**
**(உத்தரவாதமளித்தவர்)**

இருவருக்குமான வசிப்பிட முகவரி : A 133, ஜஸ்டிஸ் செங்கோட்டுவேலன் வழக்கறிஞர்கள் குடியிருப்பு, வீரகேரளம், கோயம்புத்தூர் – 641 041.
**மேலும்** : எண்.15, ஆனந்தா ஹவுசிங் காலனி, கோயம்புத்தூர் வடக்கு, வேலாண்டிபாளையம், கோயம்புத்தூர் – 641 025.
கடன் நிலுவைத் தொகையாக 22.02.2026 தேதியில், ரூ.1.69 கோடி, அதன் பின்வட்டி மற்றும் பிற செலவுகளுடன் செலுத்த வேண்டியுள்ளது.
எனவே பொது நலன் கருதி தெரிவித்துக் கொள்வது என்னவென்றால், மேற்படி கடன்தாரரிடமிருந்து வங்கிக்கு பெருந்தொகை வசூலிக்கப்பட வேண்டியுள்ளதால், மேற்குறித்த கடன்தாரர்/உரிமையாளர்/உத்தரவாதமளித்தவர்/அடமானதாரர்களின் எந்த சொத்துக்களின் பேரிலும் எவரும் எந்தவித பரிவர்த்தனைகளும் செய்து கொள்ள வேண்டாம் என எச்சரிக்கப்படுகிறது.

**இடம் : கோயமுத்தூர்**
**தேதி : 23.02.2026**

**கிளை மேலாளர்**
**இந்தியன் வங்கி**

படிவ எண்-3: [பார்க்க - ஒழுங்குமுறை 13(1)(a)]
**மும்பைக் கடன் வசூல் தீர்ப்பாயம் (DRT 1)**
2ஆவது தளம், கொலாபா, டெலிஃபோன் பவன், கொலாபா சந்தை, மும்பை - 400 005.
(5ஆவது தளம், சிந்தியா ஹவுஸ், பல்லார்டு, மும்பை-400001)
**வழக்கு எண்: OA/364/2025 அத்தாட்சி எண்-14**
சட்டப் பிரிவு 19, உட்பிரிவு (4) அதனுடன் கடன் வசூல் தீர்ப்பாய (நடைமுறை) விதிகள் 1993, விதி 5, உள்விதி (2A) கீழான அழைப்பாணை
**பஞ்சாப் நேஷனல் வங்கி**
**எதிர்**
**சிராக் பிட்டி**

பெறுநர்,
**(1) M/s.[illegible] டெக்ஸ்டைல் பிரைவேட் லிமிடெட் (பிரதிவாதி எண் 4),** ஆலை வளாகம், எண் 500, சின்னமத்தம்பாளையம் பிலிச்சி அஞ்சல், கோயம்புத்தூர், தமிழ்நாடு-641019.
**(2) M/s.தி ஸ்பட்டி மில்ஸ் பிரைவேட் லிமிடெட் (பிரதிவாதி எண் 5),** ஆலை வளாகம், எண் 500, சின்னமத்தம்பாளையம் பிலிச்சி அஞ்சல் பிரஸ் காலனி, கோயம்புத்தூர், தமிழ்நாடு - 641019.

**அழைப்பாணை**

மேற்படி அசல் விண்ணப்பம் (OA) எண் OA/364/2025 மாண்பமை தலைமை அலுவலர் / பதிவாளர் முன்னிலையில் 20.01.2026 அன்று விசாரணைக்கு வந்துள்ளது.
மாண்பமை தீர்ப்பாயமானது ரூ.49,76,36,611.72 கடனைத் திரும்பப் பெறும் பொருட்டு மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 19(4)-இன் கீழ் உங்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி விண்ணப்பம் (OA) தொடர்பான அழைப்பாணையை / அறிவிப்பை வெளியிட தயவு கூர்ந்து உத்தரவிட்டுள்ளது (விண்ணப்பமானது ஆவணங்களின் நகல்கள் முதலானவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது). மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 19, உட்பிரிவு (4)-இன்படி பிரதிவாதிகளான உங்களுக்குப் பின்வருமாறு ஆணைகள் இடப்படுகின்றன.
(i) விண்ணப்பத்தில் எழுப்பப்பட்டுள்ள கோரிக்கையை ஏன் ஏற்றுக் கொண்டு தீர்ப்பு வழங்கக்கூடாது என்பதற்கான காரணத்தை அழைப்பாணை சேவை நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் எடுத்துக்காட்ட வேண்டும்;
(ii) அசல் விண்ணப்பத்தின் வரிசை எண் 3A-இன் கீழ் விண்ணப்பதாரர் குறிப்பிட்டுள்ள சொத்துக்களையும் உடைமைகளையும் தவிர பிற சொத்துக்கள் மற்றும் உடைமைகள் ஆகியவற்றின் விவரங்களை அளிக்க வேண்டும்;
(iii) சொத்துக்களை இணைப்பதற்கான விண்ணப்பத்தின் மீதான விசாரணையும் அறிவிப்பும் நிலுவையில் இருப்பதால் கடனீட்டுச் சொத்துக்கள் அல்லது அவ்வகையிலான பிற சொத்துக்கள் மற்றும் உடைமைகள் என அசல் விண்ணப்பத்தின் வரிசை எண் 3A-இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை விற்பனைசெய்யவோ கைமாற்றவோ உங்களுக்கு அனுமதி இல்லை;
(iv) தீர்ப்பாயத்தின் முன்-ஒப்புதல் இல்லாமல் ஈட்டுறுதியாக அளிக்கப்பட்டுள்ள சொத்துக்களுள் எதையும் மற்றும் / அல்லது அசல் விண்ணப்பத்தில் வரிசை எண் 3A-இல் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது தெரிவிக்கப்பட்டுள்ள சொத்துக்களையும் உடைமைகளையும் வழக்கமான வணிக நடைமுறைகளுக்கான அல்லாமல் வேறு எவ்வகையிலும் விற்பனை அல்லது குத்தகை அல்லது இதர வழிகளில் நீங்கள் கைமாற்றம் செய்யக்கூடாது;
(v) கடனீட்டுச் சொத்துக்கள் அல்லது இதர சொத்துக்கள் மற்றும் உடைமைகள் ஆகியவற்றை வழக்கமான வணிக நடைமுறையின் கீழ் விற்பதன் மூலம் பெறப்படும் தொகைக்கு நீங்கள் கணக்குக் காட்ட வேண்டும் என்பதோடு குறிப்பிட்ட சொத்துக்களை ஈட்டுறுதியாகப் பெற்றுள்ள வங்கி அல்லது நிதி நிறுவனத்தைச் சேர்ந்த கணக்கிலேயே விற்பனைத் தொகையை வைப்புத்தொகையாகச் செலுத்த வேண்டும்.
மேலும் உங்கள் வாக்குமூலத்தை எழுத்து வடிவில் விண்ணப்பதாரிடம் அளித்த தகவல்களின் நகலுடன் தாக்கல் செய்யுமாறும் 01.04.2026 அன்று பிற்பகல் 12:15 **மணிக்குப்** பதிவாளர் முன்னிலையில் ஆஜராகுமாறும் நீங்கள் ஆணையிடப்படுகிறீர்கள். தவறினால், நீங்கள் இல்லாமலே விண்ணப்பம் கேட்கப்பட்டு முடிவெடுக்கப்படும்.
கீழே எனது கையொப்பம் மற்றும் தீர்ப்பாய முத்திரை 07.02.2026 அன்று இடப்பட்டன.
குறிப்பு: குறுக்குக்கோடிடப்பட்டவை (strike out) அனைத்தும் பொருந்தாதவை.

**அழைப்பாணை விடுப்பதற்கான அதிகாரப்பூர்வ அலுவலரின் ஒப்பம்**
ஒப்/-
பதிவாளர்,
மும்பை D.R.T.எண்-1